**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை</u>**

முன்னிலை : திருமதி.என். மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.

2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 02 ஆம் நாள்

அசல் வழக்கு எண்: 04/2024

CNR No : TNCB150003452024

திரு. L.சுரேஷ் ( வயது 56 ),
த/பெ.லட்சுமணன்,
ஈட்டியார் டிவிசன், கல்லார் எஸ்டேட்,
வால்பாறை வட்டம் , கோவை மாவட்டம். ...... வாதி

/எதிர்/

செந்தில் (வயது 53),
ம/பெ. அமுதா ,
கல்லார் எஸ்டேட், சோலையார் அஞ்சல்,
வால்பாறை வட்டம் , கோவை மாவட்டம். ..... பிரதிவாதி

வாதியால் இவ்வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1-ன் படி தாவா தொகை ரூ. 42,933/-மும், அசல் ரூ.35,000/-த்திற்கு தாவா தாக்கல் தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 12% ஆண்டு வட்டியும், தீர்ப்பு தேதிக்கு பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6% ஆண்டு வட்டியும், மற்றும் செலவுக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்குரை நாள் | : | 15.02.2024 |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | : | 10.05.2021, 07.04.2022 |
| வழக்குமூலம் ஏற்பட்ட இடம் | : | வால்பாறை |
| தாவா சொத்தின் மதிப்பு | : | ரூ.42,933/- |

தாவாவின் மொத்த மதிப்பு ரூ.42,933/-த்திற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம்-1995, பிரிவு 22, அட்டவணை - 7, ஷரத்து - 1-ன் படி ரூ.1503.00 நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது கடந்த 11.03.2026-ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பால்பாண்டி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.G.மீரா மொய்தீன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வந்துள்ள நிலையில், வாதி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பிற்கு போதிய வாய்ப்பு அளித்தும், பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முன்வரததால், வாதி தரப்பு சாட்சிகள்

முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சிகளுக்காக போதிய வாய்ப்பு அளித்தும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால், ஒருதரப்பாக்கப்பட்டு வாதி தரப்பு வாதத்தை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்பாணை**

1. வாதியின் தாவா வழக்கு அனுமதிக்கப்படுகிறது,

2. வாதிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.42,933/-மும் அசல் தொகை ரூ.35,000/- த்திற்கு தாவா தாக்கல் செய்த நாளான 15.02.2024 முதல் தீர்ப்பு தேதி வரை 12% ஆண்டு வட்டியும், அதன்பின் தொகை முழுவதும் செலுத்தும் வரை 6% ஆண்டு வட்டியும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. வாதிக்கு தாவா செலவு தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**செலவுத் தொகைப் பட்டியல்**

| வ.எண் | | வாதி | பிரதிவாதி |
|---|---|---|---|
| 1. | தாவாவுக்கு ஸ்டாம்பு | ரூ.1503.00 | தாக்கல் இல்லை |
| 2. | வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00 | |
| 3. | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | ரூ. 05.00 | |
| 4. | வழக்கறிஞர் கட்டணம் | ரூ.750.00 | |
| | மொத்தம் | ரூ.2,268.00 | |

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கட்கிழமை என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரை இடப்பட்டது.

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:13:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.